# திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர்: திரு. சு. சிவராசு, இ.ஆ.ப.,

ந.க.எண்.1838–2 /2020 / பே2., நாள்.17.09.2021

பொருள் : பணிக்குழு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திருச்சிராப்பள்ளி மண்டலம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – அரசு பணியாளர் தேர்வாணையம் – 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டு நடத்திய தொகுதி–IV தேர்வு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – உப்பிலியபுரம் பேரூராட்சி – வரித்தண்டலர் – தமிழரசி (திருமதி) அ என்பவரது பணியினை பணி வரன்முறைப்படுத்தி – ஆணைப் பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை எண்.191, பொதுத்துறை, நாள்.01.02.1962.
2. அரசாணை (நிலை) எண்.800, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.16.12.1988.
3. அரசாணை எண்.271, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.04.04.1990.
4. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்.2489/ PSD–1/2020 நாள்.28.05.2020.
5. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1838–2/2020/பே2 நாள்.07.08.2020
6. இவ்வலுவலக கடித ந.க.எண்.1838/2020/பே2 நாள்.10.03.2021
7. செயல் அலுவலர், உப்பிலியபுரம் பேரூராட்சி கடிதம் ந.க.எண்.155/2020 நாள்.27.08.2021

******

**ஆணை :–**

பார்வை (4)–ல் கண்டுள்ளவாறு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தில், 2018–2019 மற்றும் 2019–2020–ம் ஆண்டின் தொகுதி IV–ல் அடங்கிய ஒருங்கிணைந்த குடிமை பணிகளில் அமைச்சு பணியில் இளநிலை உதவியாளருக்கான தேர்வாணைய தேர்வில் தேர்வு செய்யப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட பேரூராட்சி அலகிற்கு கீழ்குறிப்பிடப்பட்ட நபரை பணி ஒதுக்கீடு செய்து கடிதம் வரப்பெற்றது.

பார்வை (5)–ல் காணும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தனியர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படி பணி நியமனம் செய்யப்பட்டு பணியில் இணைந்து நாளது வரை பணிபுரிந்து வருகிறார்.

| வ. எண் | பெயர் (திருவாளர்) | திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் | பதவி மற்றும் பணிபுரியும் பேரூராட்சியின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | தேர்வாணைய பதிவெண்.2509003026 அ. தமிழரசி | ந.க.எண்.1838–2/2020/பே2 நாள்.07.08.2020 | வரித்தண்டலர், உப்பிலியபுரம் பேரூராட்சி | 18.08.2020 முற்பகல் |

எனவே, மேற்கண்ட பணியாளருக்கு பார்வை (4)–ல் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு

**" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV for the year 2018-2019 and 2019-2020."**

என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், தனியர் பணியில் சேர்ந்து ஓராண்டு கால பணியினை திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ளதாலும், பின்வரும் விவரப்படி தனியரது பணியினை கலம் (5)–ல் காணும் நாள் முதல் பணியினை வரன்முறைப்படுத்தி (Service Regularized) ஆணை பிறப்பிக்கப்படுகிறது,

| வ. எண் | வரித்தண்டலர் பெயர், பதவி மற்றும் பேரூராட்சியின் பெயர் (திருவாளர்) | வரித்தண்டலர் நிலையில் பணியில் சேர்ந்த நாள் | பணிக் காலம் ஓராண்டு முடிவடையும் நாள் | வரித்தண்டலர் நிலையில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | அ. தமிழரசி,<br>வரித்தண்டலர்,<br>உப்பிலியபுரம் பேரூராட்சி. | 18.08.2020 மு.ப | 17.08.2021 பி.ப | 18.08.2020 மு.ப |

மேற்காணும் வரித்தண்டலர் பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதற்கான அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி சம்மந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

பெறுநர்

திருமதி. அ. தமிழரசி,
வரித்தண்டலர்,
உப்பிலியபுரம் பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(செயல் அலுவலர், உப்பிலியபுரம் பேரூராட்சி மூலமாக)

**நகல்** – ஆணையர், பேரூராட்சிகளின் ஆணையரகம், சென்னை –28.
**நகல்** – செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.
**நகல்** – செயல் அலுவலர், உப்பிலியபுரம் பேரூராட்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
**நகல்** – பே2 இருப்புக் கோப்பிற்கு.